# Table of content


» Guide to Educators ........ ii

» Activity 1: Listen and repeat........ 1

» Activity 2: Read and practise. ........ 2

» Activity 3: Spell, read and write.......... 3

» Activity 4: Fill in the blanks........ 4

» Activity 5: Choose the appropriate word......... 5

» Activity 6: Read and understand........ 6

» Activity 7: Speak and write.......... 7

» Activity 8: Listen, understand and write. ........ 9

» Activity 9: Read and speak. ........ 12

» Activity 10: Listen and read. ........ 13

# Guide to Educators

## Theme: Natural Calamities

1

## Learning Outcomes

- Use Vocabulary words related to ‘Natural Calamities’ orally and in written.
- Read common words related to Natural Calamities with correct pronunciation.
- Enumerate the consequences of Natural Calamities on people, animals, and the environment.

2

## Activities

- Listen and repeat.
- Read and practise.
- Spell, read and write.
- Fill in the blanks.
- Choose the appropriate word.
- Read and understand.
- Speak and write.
- Listen, understand and write.
- Read and speak.
- Listen and read.

3

## Other Proposed Activities

**Safety Poster Making**

- Make a poster showing “Do’s and Don’ts” during natural disasters.

**Discussion / Q&A**

- Discuss with classmates: “What would you do if there is a flood?”
- Share ideas on how to protect nature to reduce disasters.

4

## Resources

- Flashcards with images
- Worksheets (Cut and paste, Fill in the blanks)
- Song audio
- Glue, scissors, crayons
- Download and use fonts

5

## Assessments

**1. Visual Assessments**

Use Fill in the blanks or Sentence reading exercises where students can show what they have learnt through pictures.

**2. Oral Assessment**

Questions pertaining to the theme.

**3. Portfolio Assessment**

Assess overall learning progress, creativity, ownership of learning.

**Activity 1: Listen and repeat.**

**Listening and Reading Activities:**
- The Educator reads the lyrics aloud.
- The students listen and repeat.

துளி துளியா மழை துளியா

தூறல் இடும் நீர் துளியா

குளிரால் காற்றுமே

கூடி ஒன்றாய் வீசுது

மேகம் அது கரிக்கிது

மின்னல் அது வெட்டி மின்னுது

பலத்த இடி ஓசை தான்

பக்கம் எல்லாம் முழங்குது

ஊரில் உள்ள ஓடை எல்லாம் நிரம்புது

குளம் எல்லாம் குட்டை எல்லாம் விழியுது.

The educator may access the audio-visual version of the above poem/song through the link:
Link: https://youtube.com/shorts/UwO1TYmTu-A?si=Nl2-LSoPr4R2k4Ki

Other similar resourses are avilable through the following link/s:
https://youtu.be/2gtSNGKx0QQ?si=UuADHsJz7YibhpjS
https://youtu.be/-pTyE63iP2k?si=fNFbyKvocaZY9EeF

**Activity 2: Read and practise.**

# இயற்கைப் பேரழிவுகளின் வகைகள்

**Listening and Reading Activities:**
- The Educator reads and explains the words.
- The students repeat with understanding.



கனமழை




எரிமலை வெடிப்பு



வறட்சி



நிலநடுக்கம்



புயல்காற்று



வெள்ளம்

**Activity 3: Spell, read and write.**

**Reading and Writing Activities:**
The Educator explains the given words with emphasis on the alphabets/letters.
The students:
- spell and read the vocabulary words repeatedly with correct pronunciation.
- form words with the given letters.
- write the given words twice.

க + ன + ம + ழை=

-------------------------------, -------------------------------

வெ + ள் + ள + ம்=

-------------------------------, -------------------------------

வ + ற + ட் + சி=

-------------------------------, -------------------------------

பு + ய + ல் +கா + ற் + று=

-------------------------------, -------------------------------

நி + ல + ந + டு + க்+ க + ம்=

-------------------------------, -------------------------------

எ + ரி + ம + லை + வெ + டி + ப் + பு =

-------------------------------, -------------------------------

**Activity 4: Fill in the blanks.**

**Reading and Writing Activities:**
The students:
- read the following sentences with the help of the Educator.
- choose the appropriate word to fill in the blanks.
- complete the sentences and read repeatedly.

(எரிமலை, வெள்ளம், புயல்காற்று, நிலநடுக்கம், வறட்சி)

க. அதிக மழை பெய்யும்போது .......................... ஏற்படும்.

உ. பல நாட்களாக மழை பெய்யாவிட்டால் ....................... ஏற்படும்.

ங. ......................... வரும்போது நிலம் அதிரும்.

ச. 'கியூப்பு' என்னும் இடத்தில் ஓர் ...................... யைக் காணலாம்.

ரு. நேற்று நம் நாட்டில் ........................ வீசியது.

**Activity 5: Choose the appropriate word.**

**Reading and Writing Activities:**
The students:
- read the following sentences carefully with the help of the Educator.
- choose the appropriate word to fill in the blanks.
- complete the sentences and read repeatedly.

புயல்காற்று எச்சரிக்கை 1

இருக்கும்போது நாங்கள்:

**( நாயை, மருந்துகளை, வீட்டை, மெழுகுவர்த்தியை, வானொலியை, சாப்பாட்டுப் பொருள்களை)**

௧. எங்கள் ....................ப் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.



௨. ஒரு ................................ வைக்க வேண்டும்.




௩. மின்சாரம் இல்லாதபோது ..........................ப் பயன்படுத்த வேண்டும்.



௪. வெளியே போக முடியாவிட்டால் ...................... வைக்க வேண்டும்.



௫. .......................... வீட்டுக்கு உள்ளே வைக்க வேண்டும்.




௬. வீட்டில் உள்ளவர்களுக்குத் திடீரென்று வியாதி ஏற்படலாம். அதனால், ................... வாங்கி வைக்க வேண்டும்.



**Activity 6: Read and understand.**

**Reading Activity:**
- The Educator reads and explains the difference between man-made and natural calamities.
- The students observe the pictures, read, learn and understand.
- The Educator asks the students to name some examples of natural and man-made calamities such as oil spill, plane crash.

| மனிதன் செயல்களால் ஏற்படும் அழிவுகள் | இயற்கைப் பேரழிவுகள் |
|---|---|
| கடல் மாசு  | காட்டுத் தீ  |
| வாயு/ இரசாயன  | வெள்ளம்  |
| விபத்து  | எரிமலை வெடிப்பு  |
| சண்டை  | புயல்காற்று  |

**Activity 7: Speak and write.**

**Speaking and Writing Activities:**
The Educator reads and explains the words related to each calamity.
The students:
- read the words.
- form simple sentences orally and write them.

## க. புயல்காற்று

- மின்னல் மின்னு, இடி இடி, கனமழை பெய்
- கடுமையான காற்று வீசு
- மின்சாரம் இல்லை, இணையம் இல்லை, பள்ளி இல்லை, போக்குவரவு இல்லை, ஆறுகளில் வெள்ளம் ஓடு, மரங்கள் சாய், தூண்கள் சாய்

க. ........................................................................................

உ. ........................................................................................

ந. ........................................................................................

ச. ........................................................................................

## உ. வெள்ளம்

- கனமழை பெய்
- நீர் வீடுகளையும் தெருக்களையும் மூடு
- விலங்குகளுக்கும் செடிகளுக்கும் பாதிப்பு ஏற்படு
- குடி நீர் சிக்கல் ஏற்படு, நோய் கிடை

க. ..................................................................................................

உ. ..................................................................................................

ங. ..................................................................................................

ச. ..................................................................................................

## ங. வறட்சி

- மழை இல்லை
- ஏரிகளிலும் ஆறுகளிலும் நீர் இல்லை
- பயிர்கள் விளைவதில்லை
- மக்களுக்கும் விலங்குகளுக்கும் நீர் இல்லை

க. ..................................................................................................

உ. ..................................................................................................

ங. ..................................................................................................

ச. ..................................................................................................

Activity 8: Listen, understand and write.

# இயற்கைப் பேரழிவுகள்

**Listening, Reading and Writing Activities:**
The Educator:
- reads the dialogue aloud and the students repeat (students can be asked to enact in pairs).
- reads the questions and the answers aloud.

The students circle the correct answer.

செந்தில்: வணக்கம் செல்வி! இயற்கைப் பேரழிவுகள் என்பவை என்ன?

செல்வி: வணக்கம் செந்தில்! வெள்ளம், நிலநடுக்கம், புயல்காற்று, வறட்சி என்பவை இயற்கைப் பேரழிவுகள்.

செந்தில்: ஓ! வெள்ளம் என்பது என்ன?

செல்வி: அதிக மழை பெய்யும்போது வெள்ளம் வரும். தண்ணீர் நிலத்தை மூடிவிடும். வீடுகள், தெருக்கள், மரங்கள் முதலியவற்றுக்குப் பாதிப்பு ஏற்படும்.

செந்தில்: புயல்காற்று என்பது என்ன?

செல்வி: பலமான காற்று வீசும்போது புயல்காற்று என்கிறோம். மேலும் கனமழையும் பெய்யும். மரங்களும் கூரைகளும் உடைந்துவிடும். மக்கள் வீட்டுக்குள் இருக்க வேண்டும்.

செந்தில்: எங்களால் இந்த அழிவுகளை நிறுத்த முடியுமா?

செல்வி: முடியாது செந்தில். ஆனால், நாங்கள் தயாராகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும்.

செந்தில்: இயற்கைக்கு எப்படி உதவி செய்யலாம்?

செல்வி: நாங்கள் மரங்களை நட வேண்டும், இடங்களைச் சுத்தமாக வைக்க வேண்டும், தண்ணீரை வீணாக்கக் கூடாது. இப்படி இயற்கையை உதவலாம்.

செந்தில்: அது சரி செல்வி. நாங்கள் பூமியைப் பாதுகாக்க வேண்டும்.

செல்வி: ஆம் செந்தில். மேலும் நாம் இயற்கையை அழியாவிட்டால், இயற்கையும் நமக்கு நன்மை செய்யும்.

க. யார் செல்வியுடன் பேசுகிறான்?

அ. தேவி

ஆ. செல்வி

இ. செல்வன்

ஈ. செந்தில்

உ.வெள்ளம் வந்தால் என்ன ஆகும்?

அ. நிலம் அதிரும்

ஆ. நீர் நிலத்தை மூடிவிடும்

இ. பலமான காற்று வீசும்

ஈ. மிகவும் வெப்பமாகும்

ஊ. புயல்காற்று என்பது என்ன?

அ. சிறிய மழை

ஆ. பலமான காற்று

இ. வெயில் காலம்

ஈ. நல்ல காலநிலை

ச. இயற்கைக்கு எப்படி உதவி செய்யலாம்?

அ. மரங்களை நடுதல்

ஆ. மரங்களை வெட்டுதல்

இ. இடங்களை அசுத்தமாக வைத்தல்

ஈ. தண்ணீரை வீணாக்குதல்

ரு. இயற்கையை ஏன் பாதுகாக்க வேண்டும்?

அ. வெள்ளம் வராது

ஆ. புயல்காற்று வராது

இ. இயற்கை நமக்கு நன்மை செய்யும்

ஈ. சண்டை நிறுத்தப்படும்

**Activity 9: Read and speak.**

**Reading and Speaking Activities:**
Under the guidance of the Educator, the students:
- learn about the causes and preventions of natural calamities.
- read the given words and speak simple sentences.

## ஒரு மாணவனாக / மாணவியாக, என்னால் பூமியை எப்படிப் பாதுகாக்க முடியும்?

- மரங்கள் நடலாம்
- தண்ணீர் சேமிக்கலாம்
- நீர்க் கால்வாய்களில் நெகிழி (பிளாஸ்டிக்) கழிவுகளைப் போடக்கூடாது
- கடற்கரை மற்றும் ஆறுகளைச் சுத்தமாக வைக்கலாம்
- குப்பைத்தொட்டிகளைப் பயன்படுத்தலாம்
- என் பள்ளியைச் சுத்தமாக வைக்கலாம்
- என் நாட்டைச் சுத்தமாக வைக்கலாம்

**Activity 10: Listen and read.**


**Listening and Reading Activities:**
- The Educator guides the students to discuss in pairs about precautions during the cyclone-period.
- The students read the cyclone warning bulletin as a news reader with the help of the Educator.



மொரீசியசு நாட்டில் புயல்காற்று எச்சரிக்கை 3 அறிவிப்பு உள்ளது.

- பலமான காற்று வீசுகிறது.
- கடல் கொந்தளிப்பாக உள்ளது.
- வெளியே போகக் கூடாது.
- இன்று பள்ளி இல்லை.

பொதுமக்கள் கீழே உள்ள முன் எச்சரிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்:

| | |
|---|---|
| பாதுகாப்பு அறிவிப்பு வராத வரை வீட்டுக்குள் இருங்கள், வெளியே போகாதீர்கள்! |  |
| தற்போதைய செய்திகளுக்கு வானொலியையும் தொலைக்காட்சியையும் கேளுங்கள்! |  |
| வண்டியை ஓட்டாதீர்கள்! |  |
| சாப்பாட்டுப் பொருள்கள், மருந்து போன்றவை வையுங்கள்! |     |